செ.வெ.எண்: 488

28.07.2011

# செய்தி குறிப்பு

## தாட்கோ மாவட்ட மேலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 3 நாள் பயிற்சி முகாம்

## மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. என். சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக பல திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்த உள்ளதாக அறிவித்துள்ளது. இப்புதிய திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் வகையில் தாட்கோ மாவட்ட மேலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு தேவையான பயிற்சி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் முதன் முறையாக தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் (NIRD) தாட்கோ தனது மாவட்ட மேலாளர்களுக்கும் அலுவலர்களுக்கும், பயிற்சி வழங்க உள்ளது. ஏழை, எளிய கிராமப்புற மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும், கிராமப்புறங்களில் சுய வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், சமூக, பொருளாதார, மேம்பாட்டுத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திடவும் இந்திய அளவில் அரசு அலுவலர்கள், வங்கியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதில் தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம் (NIRD) முதன்மையானது ஆகும். இந்நிறுவனம் மத்திய அரசின் நிறுவனமாகும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதில் வங்கியாளர்களின் பங்களிப்பும் முக்கியமானதாகும். எனவே இப்பயிற்சி முகாமில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர்களுக்கும் தாட்கோ அலுவலர்களுடன் இணைந்து ஒருங்கிணைந்த பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இப்பயிற்சி முகாமில் ஆதிதிராவிட மக்களுக்கு சமூக, பொருளாதார வளர்ச்சிக்கான நிதி உதவி வழங்குதல், கிராமங்களில் உள்ள ஏழ்மை நிலையை அகற்றுதல், கிராமப்புறங்களில் கல்வி, சுகாதாரம், சுத்தமான குடிநீர் மற்றும் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், களப்பணிகளை எவ்வாறு சிறப்பாக செயல்படுத்துவது, அரசின் பிற துறைகளின் சமூக மேம்பாட்டு திட்டங்கள், ஊரக வளர்ச்சி திட்டங்களை ஒருங்கிணைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்கு செயல்படுத்துதல்,

சிறு, குறு, நடுத்தர தொழில் முனைவோரை ஊக்குவித்தல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை தயாரித்தல், ஆதிதிராவிடர், பழங்குடியின மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் திட்டங்கள், பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளுதல், இயற்கை வளங்கள், மனித வளங்களை எப்படி சிறப்பாக பயன்படுத்துவது, மாவட்ட அளவில் சுய வேலை வாய்ப்புக்கான திட்டங்களை தயாரித்தல், திட்டங்களை வங்கியாளர்களுடன் இணைந்து எவ்வாறு சிறப்பாக செயல்படுத்துவது, ஆதிதிராவிடர், பழங்குடியின மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல், உள்ளூர் தேவைகளை மனதில் கொண்டு ஆதிதிராவிட மக்களுக்கு தேவையான திட்டங்களை வங்கியாளர்களுடன் சேர்ந்து தயாரித்தல் என்று பல்வேறு தலைப்புகளில் தாட்கோ அலுவலர்களுக்கும், வங்கியாளர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இப்பயிற்சி முகாமை மாண்புமிகு ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு என். சுப்பிரமணியன் அவர்கள் தொடங்கி வைத்து "இப்பயிற்சியை தாட்கோ மாவட்ட மேலாளர்களும், அலுவலர்களும் நன்கு பயன்படுத்திக்கொண்டு தங்கள் பணியை மேலும் சிறப்பாக ஆற்ற வேண்டும், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலனுக்கான, மேம்பாட்டிற்கான அரசின் திட்டங்களையும், நிதி உதவிகளையும் விரைவாகவும் முனைப்புடன் செயல்படுத்திட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திரு. ஏ.எஸ். ஜீவரத்தினம், இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு சா. விஜயராஜ் குமார், இ.ஆ.ப., தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் திட்ட இயக்குநர் திரு.எல்.எஸ். ராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.